செ.வெ.எண்: 1 நாள்: 01.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 1232997 வாக்காளர்கள் உள்ளனர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நமது மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்குரிய சிறப்பு சுருக்கத்திருத்த முறை 2017-க்கான வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சியினர் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.09.2016) வெளியிட்டார்.

இந்த வரைவு வாக்காளர் பட்டியல்களை அரசியல் கட்சியினர் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வெளியிட்டு குறுந்தகடுகளை வழங்கி பேசியதாவது:

இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவின்படி 1.1.2017 தேதியினை அடிப்படையாக கொண்டு வாக்காளர் பட்டியல் தயார் செய்வது தொடர்பாக வரைவு வாக்காளர் பட்டியல் இன்று (01.09.2016) வெளியிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் உரிய சிறப்பு சுருக்கத்திருத்தம் 2017-க்கான வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதன் விபரம் அனைத்து வாக்குச்சாவடி மையங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள், புதுக்கோட்டை சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படவுள்ளது.
இந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு குறித்து கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் குறித்து இன்று (1.9.2016) முதல் 30.9.2016 வரை தெரிவிக்கலாம். கிராம சபை உள்ளாட்சி அமைப்பு மற்றும் RWA கூட்டங்கள் போன்ற இடங்களில் வரைவு



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நமது மாவட்டத்திலுள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்குரிய சிறப்பு சுருக்கத்திருத்த முறை 2017-க்கான வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து அரசியல் கட்சியினர் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.09.2016) வெளியிட்டார்.

வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர் மற்றும் புகைப்படம் சரிபார்ப்பு தொடர்பாக பகுதி மற்றும் பிரிவு படிக்கும் பணிகள் 10.9.2016 மற்றும் 24.09.2016 ஆகிய இரு தினங்களில் (சனிக்கிழமை) நடைபெறும். அரசியல் கட்சியினர் வாக்குச்சாவடி முகவர்களுடன் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெற சிறப்பு முகாம் 11.9.2016 மற்றும் 25.9.2016 ஆகிய இரு தினங்களில் (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுவதுடன் வாக்காளர் பதிவு அலுவலர் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனை விண்ணப்பங்களின் மீது இறுதி முடிவு 4.11.2016 அன்று எடுக்கப்பட்டு 5.1.2017 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும்.

மேலும் 29.04.2016 அன்று வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல் 2016ன்படி 6 சட்டமன்ற தொகுதிகளிலும் 616674 ஆண் வாக்காளர்களும், 621801 பெண் வாக்காளர்களும், 18 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 1238493 வாக்காளர்கள் இருந்தனர். இதில் தொடர் திருத்தம் 2016 மேற்கொண்டதில் 986 சேர்த்தல் மனுக்களும், 6482 நீக்கல் மனுக்களும் ஏற்கப்பட்டது. அதனடிப்படையில் இன்று (1.9.2016) வெளியிடப்பட்ட வரைவு வாக்காளர் பட்டியல்-2017ன்படி 178.கந்தர்வக்கோட்டை (தனி)

சட்டமன்ற தொகுதியில் 94346 ஆண் வாக்காளர்களும், 91784 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 186137 வாக்காளர்களும், 179.விராலிமலை சட்டமன்ற தொகுதியில் 101114 ஆண் வாக்காளர்களும், 100756 பெண் வாக்காளர்களும், 3 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 201873 வாக்காளர்களும், 180.புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் 111776 ஆண் வாக்காளர்களும், 115515 பெண் வாக்காளர்களும், 7 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 227298 வாக்காளர்களும், 181. திருமயம் சட்டமன்ற தொகுதியில் 101780 ஆண் வாக்காளர்களும், 105179 பெண் வாக்காளர்களும், 0 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 206959 வாக்காளர்களும், 182.ஆலங்குடி சட்டமன்ற தொகுதியில் 98661 ஆண் வாக்காளர்களும், 99599 பெண் வாக்காளர்களும், 1 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 198261 வாக்காளர்களும், 183.அறந்தாங்கி சட்டமன்ற தொகுதியில் 105799 ஆண் வாக்காளர்களும், 106670 பெண் வாக்காளர்களும், 0 மூன்றாம் பாலினத்தவர்களும், என மொத்தம் 212469 வாக்காளர்களும் என 6 சட்டமன்ற தொகுதிகளிலும் 613476 ஆண் வாக்காளர்களும், 619503 பெண் வாக்காளர்களும், 18 மூன்றாம் பாலினத்தவர்களும் என மொத்தம் 1232997 வாக்காளர்கள் உள்ளனர்.

மேலும் 18 வயது நிரம்பியவர்கள் புதிதாக வாக்காளர்களாக பெயர் சேர்க்க படிவம் 6ம், வெளிநாட்டில் வசிக்கும் இந்திய குடிமக்கள் பெயர் சேர்க்க படிவம் 6ஏ-ம், ஒரு சட்டமன்ற தொகுதிக்குள் வசிப்பிடம் மாறியிருந்தால் படிவம் 8ஏ-ம், பெயரை நீக்க படிவம் 7ம், பெயர் வயது, பாலினம், உறவுமுறை முதலிய பதிவுகளில் திருத்தம் அல்லது சரியான உருவப்படம் இடம்பெறச் செய்ய படிவம் 8ம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இவ்வாறு பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்களை 1.9.2016 முதல் 30.9.2016 வரை அலுவலக நாட்களிலும், 11.9.2016 மற்றும் 25.9.2016 ஆகிய சிறப்பு முகாம் நாட்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரையிலும் அனைத்து வாக்குச்சாவடி மையங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள், புதுக்கோட்டை சார் ஆட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில் பொதுமக்கள் அளிக்கலாம்.

எனவே 18 வயது பூர்த்தியடைந்த அனைத்து வாக்காளர்களும் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, புதுக்கோட்டை சார் ஆட்சியர் திரு.எஸ்.பி.அம்ரித்,இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.மு.வடிவேல்பிரபு (இலுப்பூர்), திருமதி.இரா.இரம்யாதேவி (அறந்தாங்கி), அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் திரு.பாஸ்கர் (அதிமுக), திரு.நயினாமுகம்மது (திமுக), திரு.இப்ராஹிம்பாபு (காங்கிரஸ்), திரு.சுப்பிரமணியன் (பா.ஜ.க), திரு.பரமஜோதி (தேமுதிக), திரு.அன்புமணவாளன் (சிபிஐ-எம்), அனைத்து வட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**